பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 04 திங்கட்கிழமை 19.12.2022 கதிர் 44

## இது ரகசியம் அல்ல!

’சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி’ - என்பார்கள். எப்போதோ நடத்த வேண்டிய பவள விழாவை - அல்லது பவள விழாவை வரவேற்பதற்கான நிகழ்வை - அவசரப்பட்டு நேரத்துடன் நடத்தி, கட்சிக்குள் ☞ 2

# 170 ரோகிங்கியர்களுடன் மற்றொரு படகு மூழ்கியது



## மீட்கப்பட்டவர்கள் பரபரப்புத் தகவல் தங்கள் கண் முன்னேயே நடந்ததாம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.19

**பங்களாதேஷில் இருந்து ரோகிங்கிய அகதிகளுடன் இந்தோனேஷியா நோக்கிப் புறப்பட்ட இரு படகுகளில் ஒன்று தமது கண் முன்னேயே 170 பேருடன் கடலில் மூழ்கியதாக, நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்ட படகில் இருந்து காங்கேசன்துறைக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.** ☞ 2

## உலக கிண்ணம் ஆர்ஜன்ரீனாவுக்கு



22 ஆவது உலக கிண்ண கால்பந்து போட்டித் தொடரில் ஆர்ஜன்ரீனா அணி மூன்றாவது முறையாகவும் சாம்பியன் பட்டத்தை வெற்றுள்ளது.

32 நாடுகள் பங்கேற்ற இந்த கால்பந்து தொடர் கடந்த மாதம் 20 ஆம் திகதி கட்டாரில் கோலாகலமாக ☞ 2

## பல்கலை மாணவன் நீரில் மூழ்கி மரணம்

வீரவில ஏரியின் மதகுக்கு அருகில் நீராடச் சென்ற ஜயவர்தனபுர பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தைச் சேர்ந்த சுமார் 30 பேர் கொண்ட மாணவர்கள் குழு திஸ்ஸமஹாராம ☞ 2

## மீட்கப்பட்ட ரோகிங்கியர்களை நேற்று சட்ட வைத்திய அதிகாரி பரிசோதனை




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.19

இலங்கை கடற்பரப்பில் தத்தளித்து காப்பாற்றப்பட்ட 104 ரோகிங்கியர்களும் காங்கேசன்துறை பொலிஸார் ஊடாக சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். ☞ 2

## வீதியை விட்டு விலகி கடலில் பாய்ந்த கார்!



மாத்தறை - தங்காலை பிரதான வீதியில் பயணித்த கார் ஒன்று இன்று பிற்பகல் வெல்லமடம பகுதியில் கடலில் வீழ்ந்துள்ளது. சாரதிக்கு நித்திரை ☞ 2

## போதையில் நகர முடியாத இளைஞர் ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்தார்!

### மட்டக்களப்பு சந்திவெளியில் சம்பவம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி பகுதியில் நேற்று இரவு ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார் என சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவு மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் ☞ 2

## தற்போதைய அபிவிருத்தி அலுவலர்கள் 26 ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம்!

### மார்ச் 24 இற்கு முன் என்கிறார் கல்வி அமைச்சர்

அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை உடனடியாக நடத்தப்படவுள்ளது.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவின் உத்தரவின் பேரில் இடம்பெறும் இந்த பரீட்சையை அடுத்து 26 ஆயிரம் புதிய ☞ 10

## பல்கலை அனுமதி; இன்று முதல் பதிவு

2021 க.பொ.த உயர்தர பரீட்சை தோற்றிய மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு புதிய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி பல்கலைக்கழக நுழைவுக் குத் தகுதிபெறும் மாணவர்கள் இன்று முதல், அவர்கள் தேர்ந்தெடுத்த பல்கலைக்கழகங்களில் ☞ 10

## தமிழ் அரசு பவள விழாவுக்கான ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சியில்!





இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பவள விழாவுக்கான ஆரம்ப நிகழ்வு, நேற்றைய தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில், கட்சியின் தலைவர் மாவை.சோ சேனாதிராசா தலைமையில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர். சிவசுப்பிரமணியம் பத்மநாதன் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு ☞ 10

## இந்தியாவின் அனுசரணையுடன் பேசுவதே மாவையின் விருப்பமும்

### கிளிநொச்சி நிகழ்வில் அவரே தெரிவிப்பு



தமிழ் மக்களுக்கான தீர்வு பற்றி பேசுவதாயின் தமிழர்களின் விடுதலையை நேசிக்கும் கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வதேச நாடுகளின் - குறிப்பாக இந்தியாவின் - அனுசரணையுடன் இலங்கை அரசுடன் பேச வேண்டுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். ☞ 10



## சமஷ்டி தேடிய தந்தை செல்வாவின் பயணம் 1948 இலேயே தொடங்கியது என்கிறார் சிறி

### நேற்றைய கிளிநொச்சிக் கூட்டத்தில் அவர் உரை

சமஷ்டி முறையிலான ஆட்சி முறை உருவாக்கப்பட வேண்டும். அது இலங்கையில் தமிழ், சிங்கள மக்களையும் பாதிக்காது நாட்டை சரியாக கொண்டு செல்லும் என தந்தை செல்வா 1948 ஆம் ஆண்டிலே விடுதலைப் பயணத்தை ஆரம்பித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசு கட்சியின் 75 ஆவது ஆண்டு ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை ☞ 10

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முணுமுணுப்பை சம்பாதித்து இருக்கின்றார் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா.

கூட்ட வேண்டிய கட்சியின் வருடாந்த தேசிய மாநாட்டைக் காலம் கடந்தும் கூட்டாமல் இழுத்தடித்தபடி, மறுபக்கத்தில் 73 ஆவது வருட பூர்த்தியிலேயே, 75 ஆவது வருடபூர்த்திக்கான பவள விழா நிகழ்வை அல்லது அதை வரவேற்கும் நிகழ்வை ஆர்ப்பாட்டத்துடன் நடத்துகின்றார் கட்சித் தலைவர் என்ற அதிருப்தி கட்சிக்குள் பல மட்டங்களிலும் எதிரொலிக்கின்றது.

மேற்படி நேற்றைய கிளிநொச்சி நிகழ்வுக்குப் பிரதம பேச்சாளர் கலாநிதி பத்மநாதன், வரலாற்றுப் பேராசிரியர். அவருக்குத் தமிழரசு சரித்திரம் அத்துபடி. வரலாற்றுப் பேராசிரியருக்கு தமிழரசு பவள விழா எப்போது, அதனை வரவேற்கும் நிகழ்வு எவ்வேளையில் நடத்தப்பட வேண்டும் என்பவற்றையெல்லாம் யாரும் சொல்லித் தரத் தேவையில்லை. அவருக்கு நன்கு தெரியும். வரலாற்றுப் பேராசிரியர் வரலாறு தெரியாமல் அல்லது அதைக் கவனியாமல் விட்டது எங்ஙனம் என்பது புரியவில்லை என்றார் கட்சியின் பிரமுகர் ஒருவர்.

தமிழரசு வட்டம் சுருங்குகின்றதா என்ற கேள்வியும் எழாமல் இல்லை. கட்சியின் பவள விழா என்பது முக்கியமான நிகழ்வு. ஆனால் கட்சியின் நேற்றைய பவள விழா ஆரம்ப கூட்டத்திற்கு கிழக்கிலிருந்து ஒரு ஈ, காக்கை கூட இல்லை. அவசர அவசரமாக இந்தக் கூட்டத்தை நடத்திய மாவை திருக்கூத்தின் மகாத்மியம் அப்படி...!

உள்ளூராட்சி தேர்தல் வரப்போகின்றது. அதற்குள் தமிழரசின் வீட்டுச் சின்னம்முடக்கப்பட்டு, பங்காளிக் கட்சிகளான மற்றைய இரண்டில் ஏதேனும் ஒன்றின் சின்னத்தில் போட்டியிட நேர்ந்தாலும் நேரலாம். பங்காளி கட்சிகள் இரண்டில் எதற்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகின்றதோ தெரியவில்லை.

கட்சியின் தேசிய மாநாட்டை - வருடாந்தப் பொதுக்கூட்டத்தை - உரிய காலத்தில் கூட்டாத தமிழரசுக் கட்சியைத் தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலில் வைத்திருக்கும் தேர்தல் ஆணையத்துக்கு எதிராக சில தரப்புகள் நடவடிக்கை எடுக்கத் தயாராகி விட்டன என்ற கிசுகிசுக்கள் கிட்டிஉள்ளன.

நேற்று வந்த ஜனநாயக போராளிகள் கட்சி, பிள்ளையானின் கட்சி போன்றவை கூட வருடாந்த தேசிய மாநாட்டை முறைப்படி நடத்தி விட்டன. மூன்றரை ஆண்டுகள் கடந்தும், ஏழரை தசாப்த சரித்திரம் கொண்ட தமிழரசு இன்னும் வருடாந்த மாநாட்டைக் கூட்டவே இல்லை.

உள்ளூராட்சி தேர்தல் வந்தால் மேயர் வேட்பாளர் தெரிவுக்கே நல்ல பேரமும் வசூலும் வாய்ப்பு உண்டு. 'ரேட்' பிய்த்துக் கொண்டு போகும் சூழலும் உள்ளது. அதுவும் கொழுத்த புள்ளிகள் சில கண் வைத்து இருப்பதால் கேள்வி உச்சம் என்பது நிச்சயம். வழமை போல சிலருக்கு வாய்ப்பு கொடுப்பதற்கும், வேறு சிலருக்கு வாய்ப்பு கொடுக்காமல் வெட்டுவதற்கும் கொழுத்த வரும்படி அறுவிடலாம்.

அவற்றைக் கையாண்டு, வசூலைக் கையாடி, முடித்துவிட்டு, தேசிய மாநாட்டை சாவகாசமாய் நடத்தலாம் என்ற சிந்தனை போலும்.

வேட்பாளர் தெரிவு வேளை வரைக் கட்சிப் பதவியைக் காப்பாற்றினால், பொதுத் தேர்தலை அடுத்து மாதாந்தம் இழந்துவிட்ட - அடியோடு படுத்துவிட்ட - வரும்படியை பழைய நிலுவையோடு அறவிட்டுவிடலாம் என்ற கணக்குத்தான்.

மீண்டும் சொல்கிறேன் - 'பாவம் தமிழரசு...!'

- மின்னல் -

## 170 ரோகிங்கியர்களுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முப்பது நாள்களின் முன்பு பங்களாதேஷில் இருந்தும் புறப்பட்ட நாம் படகு பழுதடைந்தமையினால் இந்தோனேசியா நோக்கி தொடர்ந்து பயணிக்க முடியாத அவலத்திற்குத் தள்ளப்பட்டோம். உணவு இல்லை, நீர் இல்லை என்ற போதும், இருந்தவற்றை சிறுவர்களிற்கு மட்டும் வழங்கினோம். பெரியவர்கள் உணவு இன்றியே பட்டினியாக இருந்தோம் எனத் தெரிவித்துள்ளனர்.

முப்பது நாள்களில் 11 நாள்கள் மட்டுமே உணவு கிடைத்தது. இதேநேரம் எம்முடன் இன்னும் ஒரு படகு சுமார் 170 பேருடன் பங்களாதேஷில் இருந்து புறப்பட்டது. அந்தக் கப்பலும் பழுதடைந்த காரணத்தினால் முழுமையாக நீரில் மூழ்கியது. அதனை கண்ணுற்றோம். - என அவர்கள் கூறுகின்றனர்.

இதேநேரம் மீட்கப்பட்டவர்கள் உணவு இன்றி அதிக நாள்கள் இருந்தமையினால், உடல் மெலிந்து, நலிவுற்ற தோற்றத்திலேயே காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## உலக கிண்ணம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகியது.

லீக்சுற்றுகள், நொக்அவுட் சுற்றுகளின் முடிவில் நடப்பு சாம்பியன் பிரான்ஸும், முன்னாள் சாம்பியன் ஆர்ஜன்ரீனாவும் இறுதிப்போட்டிக்குள் நுழைந்தன.

இரண்டு அணிகளும் தலா இரண்டு முறை உலக கிண்ணத்தை வென்று மூன்றாவது முறை உலக கிண்ணத்தை தனதாக்கிக் கொள்ளும் நோக்குடன் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் களமிறங்கின.

போட்டியின் ஆரம்பம் முதல் இரு அணியினரும் மிக சிறப்பாக விளையாடி கோல் வாய்ப்புகளை உருவாக்கினர்.

போட்டியின் 23 ஆவது நிமிடத்தில் ஆர்ஜன்ரீனா அணிக்கு பெனால்டி கிடைத்தது.

இதனை சரியாக பயன்படுத்திய அணித் தலைவர் மெஸ்ஸி கோல் அடித்து அசத்தினார்.

இதனையடுத்து போட்டியில் 36 ஆவது நிமிடத்தில் ஆர்ஜன்ரீனா அணி சார்பில் 2 ஆவது கோலை ðngel Di Mara அடித்தார்.

அதனடிப்படையில் முதல் பாதி முடிவில் 2- 0 என ஆர்ஜன்ரீனா முன்னிலை வகித்தது.

தொடர்ந்து நடைபெற்ற 2 ஆவது பாதியில் இரு அணிகளும் மிக சிறப்பாக விளையாடி கோல் வாய்ப்புகளை உருவாக்கினர்.

போட்டியின் 80 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் அணிக்கு பெனால்டி கிடைத்தது.

இதனை சரியாக பயன்படுத்திய பிரான்ஸ் அணி வீரர் kylian mbapp கோல் அடித்து அசத்தினார்.

இதனையடுத்து விறுவிறுப்பாக சென்ற போட்டியின் 81 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் அணி வீரர் kylian mbapp மீண்டும் கோல் அடித்து போட்டியை சமநிலைக்கு கொண்டுவந்தார்.

அதனடிப்படையில் போட்டியின் 90 நிமிடங்கள் முடிவில் இரு அணிகளும் 2 - 2 என்ற ரீதியில் சமநிலையில் இருந்தன.

இதனையடுத்து இரு அணிகளுக்கும் மேலதிக 30 நிமிடங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது போட்டியின் 108 நிமிடத்தில் ஆர்ஜன்ரீனா அணி சார்பில் அணித் தலைவர் மெஸ்ஸி கோல் அடித்தார்.

இதனையடுத்து போட்டியின் 118 நிமிடத்தில் kylian mbapp மீண்டும் கோல் அடித்து போட்டியை சமநிலைக்கு கொண்டுவந்தார்.

இதனையடுத்து மேலதிக நேர முடிவில் இரு அணிகளும் 3 - 3 என்ற ரீதியில் சமநிலையில் இருந்தது.

இதனையடுத்து பெனால்ட்டி வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதில் 4 - 2 என்ற ரீதியில் ஆர்ஜன்ரீனா அணி போட்டியில் வெற்றி பெற்றது.

இம்முறை கால்பந்து உலக கிண்ண தொடரில் 7 கோல்களை அடித்து அதிக கோல்களை அடித்தமைக்கான கோல்டன் பூட் விருதை kylian mbapp தனதாக்கி கொண்டுள்ளார்.

## பல்கலை மாணவன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெபரவெவ பிரதேசத்தில் உள்ள மற்றுமொரு மாணவனின் வீட்டுக்கு சென்று திரும்பி வந்து கொண்டிருந்த போது இடையில் குறித்த ஏரியில் நீராடச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன் அங்கு நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலம் நேற்று முன்தினம் இரவு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் பதுளை தெமட்டவெல்ஹின்ன பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

## மீட்கப்பட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பர்மாவில் இருந்து விரட்டப்பட்ட ரோகிங்கிய இன முஸ்லிம்கள் பங்களாதேசில் அகதி முகாமில் தங்கியிருந்த சமயம் இந்தோனேசியாவிற்கு படகு மூலம் பயணித்தபோதே நடுக்கடலில் படகு பழுதடைந்து 3 வாரங்களாக நடுக் கடலில் தத்தளித்துள்ளனர்.

இவ்வாறு தத்தளித்தவர்கள் நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு நேற்றைய தினம் கடற்படையினரின் படகு மூலம் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்டனர்.

அந்த 104 பேரில் இருவர் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் எஞ்சிய 102 பேரும் நேற்று இரவு 10 மணியளவில் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன் அடிப்படையில் இவர்கள் அனைவரும் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு யு.என்.எச்.சி. ஆரின் பராமரிப்பிற்கு அனுப்பி வைக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வீதியை விட்டு விலகி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ருஹுணு தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரான குறித்த அந்த சாரதி, காலியை வசிப்பிடமாகக் கொண்ட 50 வயதுடைய ஒருவரென தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்தில் காயமடைந்த அவர் மாத்தறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## போதையில் நகர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சித்தாண்டியூடாக பயணிக்கையில் தண்டாவளத்திலிருந்து எழுந்த இளைஞன் ஒருவர் புகையிரதத்தால் மோதுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சடலம் அவ்விடத்திலிருந்த வேளை அவரது தந்தையினால் அடையாளம் காணப்பட்டு ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

சம்பவத்தில் மரணமடைந்த இளைஞன் மாவடிவேம்பை சேர்ந்த பாலசந்திரன் சுஜீவகுமார் (32) என அடையாளம் காணப்பட்டது.

மது போதையுடன் ரயில் தண்டாவத்தில் இருந்து எழும்ப முடியாத நிலையில் தான் விபத்தில் அவர் பலியாகியுள்ளார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் நேற்றுக் காலை ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு சென்று, சடலத்தை பார்வையிட்டமையுடன் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சடலத்தை கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு கட்டளை பிறப்பித்தார்.

மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு கல்லில் பல மாங்காய்களை விழுத்த நினைக்கின்றார் ரணில்!

## ஸ்ரீநேசன் சுட்டிக்காட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒரு கல்லில் பல மாங்காய்களை விழுத்த நினைக்கின்றார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

அறிக்கையொன்றில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பழுத்த அரசியல் வாதியாவார். ஆனால், மக்கள் மத்தியில் அவரது இராஜ தந்திரங்கள் பெரிதாக விளங்குவதில்லை.

இதனால்தான் கடந்த 2020 நாடாளுமன்றத் தேர்தலில் அவரது ஐக்கிய தேசியக் கட்சி பூச்சிய நிலைக்குச் சென்றது.

அதனோடு ரணிலின் அரசியல் சரித்திரம் பூச்சியமாகிவிட்டது என்றுதான் கணிசமானவர்கள் நினைத்தார்கள். ஆனால், பூச்சியத்தில் இருந்தும் இராச்சியத்தின் தலைவர் ஆகலாம் என்பதை ரணில் நிரூபித்து விட்டார்.

தற்போது அவர் தேசிய இனப்பிரச்சினையை 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்பாகத் தீர்த்து விடப்போவது போல் பேசி வருகின்றார். ஆனால், அது சாத்தியமற்றது என்பதைத் தமிழ்த் தலைவர்கள் நன்கு அறிவார்கள்.

ரணில் விக்கிரமசிங்க 45 வருட கால நாடாளுமன்ற அனுபவசாலி என்பதுடன் பல்வகைப் பதவிகளை வகித்தவர். தற்போது சாத்தியமற்றது என்று நினைத்த ஜனாதிபதிப் பதவியையும் தனதாக்கியுள்ளார்.

இந்த நிலையில், இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பான பேச்சு என்ற ஒரு கல்லின் மூலமாக பல மாங்காய்களை விழுத்த அவர் நினைக்கின்றார்.

எது எப்படியாக இருந்தாலும் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் அந்தப் பேச்சில் கலந்துகொள்ள வேண்டியது அவசியமாகவுள்ளது.

அவ்வாறு கலந்துகொள்ளாது விட்டால், தான் நியாயமான அடிப்படையில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முற்பட்ட போதும் தமிழ்த் தலைமைகள் ஒத்துழைக்கவில்லை என்றும், அவர்கள் இனப்பிரச்சினையை அப்படியே வைத்துக்கொண்டு அரசியல் செய்ய விரும்புகின்றார்கள் என்றும் குற்றச்சாட்டை உருவாக்கி சர்வதேசத்துக்கு ஜனாதிபதி சொல்லுவார்.

இதனைத் தமிழ்த் தேசியத் தலைவர்கள் அறிவார்கள்.

எனவே, தமிழ்த் தலைவர்கள் அனைவரும் இந்தப் பேச்சில் கலந்துகொள்ள வேண்டும். ஆனால், காலத்தை நீடிக்க விடக்கூடாது என்பது கணிசமான தமிழ் மக்களின் நிலைப்பாடாகும். அது அவ்வாறு இருக்க, ஜனாதிபதி ரணில் பேச்சு என்ற தந்திரக்கல் மூலமாக விழுத்த நினைக்கும் மாங்காய்கள் எவை எனப் பார்ப்போம்.

சர்வதேசத்தின் பார்வையில், ஜனாதிபதி தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் சாதகமாகச் செயற்படுகின்றார் என்ற விம்பம் ரணிலுக்கு ஏற்படும். அதேவேளை, சர்வதேச மத்தியஸ்த பொறிமுறையில் இருந்து தப்பித்துக்கொள்ள ஜனாதிபதி நினைக்கிறார்.

ஆனால், பேச்சின் அடுத்த கட்டத்திலாவது சர்வதேசத் தலையீடு அவசியமானதாகும். குறிப்பாக இந்தியாவின் தலையீட்டைத் தவிர்க்க முடியாது. அமரிக்கா, கனடா போன்ற நாடுகளது தலையீடுகளும் அவசியமானது.

சாதாரண தமிழ் மக்களின் பார்வையில், ரணில் இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்புகின்றார், அவர் ராஜபக்ஷக்களை விடப் பரவாயில்லை, இனவாதம் அற்றவர் அல்லது குறைந்தவர் என்ற எண்ணம் ஏற்படலாம்.

மொட்டுக் கட்சியினர் பார்வையில் தமக்கு ஏற்பட்ட அதிகார நெருக்கடியில் இருந்தும், நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்தும் மீள்வதற்கு இந்த நாடகத்தைக் குறித்த காலம் நடத்த வேண்டும், பின்னர் சிங்களவர்களின் காவலர்களாகக் காட்டி இதனைக் குழப்ப ரணில் வழிவகுப்பார் என்றும் கருத வாய்ப்புள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் பார்வையில் பேச்சைப் புறக்கணித்தால் தாம் தீர்வுக்கு எதிரானவர்கள் என்ற பெயரை ரணில் ஏற்படுத்தி விடுவார் என நினைக்க இடமுண்டு. எனவே, தம்பக்கமாக அடிக்கப்பட்ட பேச்சு என்ற பந்தை கவனமாகக் கையாள வேண்டிய நிலைப்பாட்டில் தமிழ்த் தரப்பினர் உள்ளனர்.

ஜனாதிபதியின் பார்வையில் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்பாத சமஷ்டி தீர்வை வழங்க முடியாது, அவர்களது கருத்தையும் உள்ளடக்கிய குறைந்த பட்சமான தீர்வையே தர முடியும் என்ற நிலையில் உள்ளார்.

மேலும் கிழக்கு முஸ்லிம் தலைவர்களையும், கூடவே சந்திரகாந்தன் (பிள்ளையான்), கிழக்குச் சிங்களத் தலைவர்கள் போன்றவர்களைப் பயன்படுத்தி வடக்கோடு கிழக்கை இணைக்கும் கோரிக்கையை நிராகரிக்க முடியும் என்ற நிலைப்பாடு ஜனாதிபதிக்கு உண்டு.

மேலும் ஐக்கிய தேசியத் கட்சியினர் பார்வையில் ரணில் எப்படியாவது, அவரது இப்படியான தந்திரோபாயங்கள் மூலமாக தமது கட்சிக்கு மீண்டும் செயற்கைச் சுவாசம் அளித்து உயிர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கின்றனர்.

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினரின் ஒற்றையாட்சி சிந்தனை ராஜபக்ஷக்களின் சிந்தனைத் தளத்துக்கு ஒப்பானது என்பதை வெளிக்காட்ட ஜனாதிபதி விரும்புகின்றார்.

இப்படியாக ஒரு கல்லில் பல மாங்காயகளை விழுத்த ஜனாதிபதி ரணில் நினைக்கின்றார். கடந்த 74 ஆண்டுகளாக சிங்களத் தலைவர்கள் கையாண்ட அபதந்திரங்கள் யாவும் நாட்டுக்கும் மக்களுக்கும் அந்தரநிலையையே ஏற்படுத்தியுள்ளன.

அபதந்திரம் தனக்கந்திரம் என்பதை இந்த நாட்டை ஆட்சி செய்த சிங்களத் தலைவர்கள் விளங்காமல் இருக்கின்றமைதான் விந்தையாகவுள்ளது. அந்த அபதந்திரந்தான் இந்த நாட்டின் சமூக பொருளாதார அரசியல் அனைத்தையும் அதள பாதாளத்துக்குத் தள்ளியுள்ளது. இந்த நாட்டில் மூன்று விடயங்கள் நாட்டை வெகுவாகப் பாதித்துள்ளன. பேரின மேலாதிக்க அடிப்படைவாதம், தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமை, ஊழல் மோசடிகள்.

இந்த விடயங்களுக்கு நிலையான நியாயமான தீர்வு காணப்படாதவரை இந்த நாட்டையும் மக்களையும் எந்தத் தலைவர்களாலும் மீட்க முடியாது.

இவற்றைத் தீர்ப்பதற்கு தலைவர்களுக்கு இதயசுத்தி இருக்க வேண்டும், மாறாக இதய சொத்தியான தலைவர்களால் நாட்டை அழிக்கவே முடியும், ஆக்க முடியாது என்பதே கடந்த 74 வருடகால தரித்திரமான சரித்திரமாகும்.

அந்த தரித்திர சரித்திரத்தில் இருந்து விடுபட பேரின அடிப்படைவாதம் அனுமதிக்காது. அதனைக் கடக்க முடியாத தலைவர்களே இலங்கையை இதுவரை ஆட்சி செய்துள்ளார்கள்.

ஜனாதிபதி ரணிலுக்கு பேரினவாதத்தை கடக்கக்கூடிய ஆளுமை ஆற்றல் உண்டா? என்பதுதான் எமது கேள்வியாகும். மொட்டுக் கட்டுப்பாட்டில் ரணில் உள்ளவரை அது அவரால் முடியாது.

மொட்டுக் கட்டுப்பாட்டை உடைப்பதாக இருந்தால் இரண்டரை வருட காலத்தின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்த முடியும். அதற்கான வாய்ப்பு எதிர்வரும் 2023 மார்ச் மாதத்தில் உண்டு. பொது மக்களதும், எதிர்க்கட்சிகளதும் அழுத்தம் அதிகரித்தால் அது சாத்தியமாகும் என தெரிவித்துள்ளார்.

## வரவு – செலவுத் திட்டக் காலங்களில் நாடாளுமன்று 20 கோடி ரூபா செலவு!

*வரவு - செலவுத் திட்ட விவாதங்களின் போது நாடாளுமன்றக் கூட்டங்களுக்காக கிட்டத்தட்ட 20 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*நாடாளுமன்ற உறுப்பினர்கள், விருந்தினர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு உணவு மற்றும் பானங்கள், எரிபொருள், மின்சாரம், நீர், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்காக இவை செலவிடப்பட்டுள்ளன.*

*பட்ஜெட் விவாதம் நடைபெற்ற மொத்த நாள்கள் 20 ஆகும். வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நவம்பர் 14ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.*

*அதன் பின்னர், வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கான வாக்கெடுப்பு நவம்பர் 15ஆம் திகதி ஆரம்பமாகி, 22ஆம் திகதி வரை ஏழு நாள்கள் நடைபெற்றது. பட்ஜெட் குழு விவாதம் நவம்பர் 23ஆம் திகதி தொடங்கி கடந்த 8 ஆம் திகதி வரை 13 நாள்கள் விவாதம் நடந்தது.*

*இதேவேளை, கடந்த 13 ஆம் திகதி கேள்விகளுக்குப் பதிலளிக்கும் கூட்டம் இடம்பெற்ற போது கேள்விகளைக் கேட்ட எம்.பி.க்கள் பலரும், கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய அமைச்சர்கள் பலரும் அன்றைய தினம் சபைக்கு சமுகமளிக்கவில்லை.*

*அந்தச் சந்திப்பிற்காக கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

## முப்படைகளினதும் செலவீனங்களை குறைப்பதற்கான நடவடிக்கை ஆரம்பம்

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைக்கு முன்னதாக அரசாங்க செலவினங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள இலங்கை அரசு முப்படையினரின் பதவிகளை வெற்றிடமாக்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இராணுவத்தினருக்கான செலவினங்களைக் குறைப்பதற்காகவும் நாட்டின் பொருளாதாரத்துக்கு மனித வளத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களுக்கு ஏனைய திறன்களுக்காக பயிற்சியளிக்கவும் விருப்ப ஓய்வு வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழிந்திருந்தார்.

அதேநேரம், பாதுகாப்பு அமைச்சும் முப்படைகளில் இருந்து வெளியேறியவர்களுக்கு பொதுமன்னிப்புக் காலமொன்றை 15 நவம்பர் முதல் 31 டிசெம்பர் 2022 வரை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், முப்படைகளின் செயற்பாட்டுடன் தொடர்பில்லாதிருக்கும் நபர்கள் பிரகடனப்படுத்தப்பட்ட பொது மன்னிப்புக் காலத்துக்குள் உரிய அறிவிப்புக்களை செய்யாது விட்டால் அந்தந்த சேவைகளிலிருந்து சட்டபூர்வ வெளியேற்றப்படத் தகுதியுடையவர்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில், அதிகாரிகள் மற்றும் ஏனைய தரவரிசைப் படையினர் உட்பட இதுவரை 16 ஆயிரத்து 141 பேர் பொதுமன்னிப்புக்காக விண்ணப்பித்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் ரவி ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 12 அதிகாரிகள் மற்றும் பிற தரவரிசைகளை உடையவர்கள் 96 பேர் வெளிநாட்டில் உள்ளனர். அவர்களில் விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் பற்றிய பரிசீலனைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

விமானப்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் துஷாந்த விஜேசிங்க குறிப்பிடுகையில், 983 விமானப்படை வீரர் கள் பொதுமன்னிப்புக்காக விண்ணப்பித்துள்ளதுடன், 732 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித் தார். கடற்படையால் எத்தனை பேர் விடுவிக்கப்பட்டனர் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

## நவம்பரில் மட்டும் 90 எச்.ஐ.வி. தொற்று உறுதியான நபர்கள் இனங்காணல்!

நவம்பரில் 90 எச்.ஐ.வி. தொற்று உறுதியான நபர்கள் கண்டறியப்பட்டனர் என்றும் இந்த ஆண்டு மட்டும் மொத்தம் 568 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசோதனை கருவிகள் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதை எளிதாக்கியுள்ளன என தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

எச்.ஐ.வி சுய – பரிசோதனைக் கருவிகளை நாடு முழுவதும் உள்ள தேசிய பாலியல் நோய் பிரிவுகளில் பெறமுடியும் என்றும் வைத்தியர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எப்பவோ முடிந்த காரியம்!

யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற யோக சுவாமிகளின் மகாவாக்கியங்கள் குறித்து பலரும் பேசுவர். அவரின் குருவான செல்லப்பா சுவாமிகளின் உபதேசம் மூலம் அவர் பெற்றுரைத்த மகா வாக்கியங்களில் ஒன்று – ‘எப்போவோ முடிந்த காரியம்’.

சர்வதேச மட்டத்தில் சில விடயங்கள் கூட யோகர் சுவாமிகளின் அந்த மகாவாக்கிய கூற்றின் அடிப்படையில் எப்பவோ முடிந்த காரியங்கள்தான். இப்போது நடப்பவை போல விடயங்கள் கட்டவிழும். ஆனால் விவகாரமும் முடிவும் எப்போதோ உறுதி செய்யப்பட்டு, தீர்க்கமாகியிருக்கும்.

அப்படிப்பட்ட ஒன்றுதான் இலங்கை விவகாரத்தை ஒட்டி ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நடைமுறையாக்கமும் ஆகும்.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான, மனித உரிமைகள் கவுன்ஸிலின் அண்மைய தீர்மானத்தை கவுன்ஸில் நடைமுறைப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையினால் ஆயிரத்து இருநூறு கோடி ரூபா ஒதுக்கப்படுகிறது. அதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான 51/1 என்ற தீர்மானம் கடந்த ஒக்டோபரில் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. அதை இலங்கை எதிர்த்திருந்தது.

அத்தீர்மானப்படி இலங்கையில் நடைபெற்ற யுத்தக்குற்றங்கள் போன்ற விடயங்களுக்கான பொறுப்புக் கூறலை நிலைநாட்டுவதற்குரிய பூர்வாங்க சட்ட விடயங்களை ஒட்டிய ஆயத்தப் பணிகளுக்கே இந்த நிதி ஒதுக்கீடு.

எந்தவொரு இறையாண்மையுள்ள அரசும் அதன் அரசமைப்பிற்கு முரணான மற்றும் உள்நாட்டு சட்ட செயல்முறைகளில் தலையிடும் வெளிப்புற பொறிமுறையை ஏற்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் அமர்வில் தெரிவித்திருந்தார்.

எனினும் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்த, 2023 ஆம் ஆண்டிற்கான ஐ.நாவின் பரிந்துரைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிர்வாக மற்றும் வரவு – செலவு விடயங்களுக்கு பொறுப்பான ஐ.நா பொதுச் சபையின் ஐந்தாவது குழுவில் இந்த வாரம் இது குறித்து விவாதிக்கப்பட்டது. எனினும் குழுவின் கூட்டத்தில் இலங்கையின் பிரதிநிதி இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

ஆயினும், இந்த விவகாரம் ‘எப்பவோ முடிந்த காரியம்’. ஜெனிவாத் தீர்மானம் எடுக்கப்பட்டு விட்டது. அது தடைபடாது. இனி முன் நகரும். இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றங்களுக்கான சான்றுகள், ஆவணங்கள், ஆதாரங்கள் போன்றவற்றை திரட்டி ஒழுங்குபடுத்தும் நடவழக்கைகள் ஜெனிவாவினால் முன்னெடுக்கப்படுவதை இனித் தடுப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. அது எப்பவோ முடிந்த காரியம்...!

## ஜனவரி 2 முதல் சகல கல்வி வலயங்களிலும் போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டங்கள்!

### கல்வி அமைச்சர் சுசில் உறுதி

பாடசாலை மாணவர்கள் மத்தியில் தீவிரமடைந்துள்ள போதைப்பொருள் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பொலிஸ், சுகாதார அமைச்சு உள்ளிட்ட பல தரப்பினருடன் இணைந்து எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி முதல் சகல கல்வி வலயங்களிலும் போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

178 நச்சுத் தன்மையுடைய போதைப் பொருள்கள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பான சட்டமூலம் கடந்த வாரம் சபாநாயகரால் சான்றுரைப்படுத்தப் பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறான போதைப்பொருள்கள் 4 மாத்திரமே காணப்பட்டன.

5 கிராம் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருப்பவர்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனையை நீதிமன்றத்தால் வழங்க முடியும்.

கொழும்பில் 144 பாடசாலைகளில் ஒரு லட்சத்து 86 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 11 ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளனர். இவர்களில் 144 ஆசிரியர்களுக்கு போதைப்பொருள் தொடர்பாக மூன்று நாள்கள் பயிற்சி வழங்கப்பட்டது. போதைப்பொருள்களை எவ்வாறு இனங்காண்பது என்பது தொடர்பில் மேற்படி பயிற்சி வழங்கப்பட்டது.

மாணவர்களுடன் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது மிகவும் பாதுகாப்பாக செயற்பட வேண்டும்.

தெரியாத ஒரு விடயத்தைக் கற்பிக்க முயற்சிப்பது பொருத்தமற்றது. வைத்தியர்கள் நோயாளர்களை அணுகுவதைப் போன்றே அதிபர்களும் ஆசிரியர்களும் பாடசாலைகளுக்குள் இந்த விடயம் தொடர்பில் மாணவர்களை அணுக வேண்டும்.

நாட்டிலுள்ள கல்வியியற் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் ஆசிரிய பயிலுநர்களுக்கு மனநலம் தொடர்பான பயிற்சியும் வழங்கப்படுகிறது.

எவ்வாறிருப்பினும், இந்த பயிற்சி சகலருக்கும் வழங்கப்படவில்லை. எனவேதான் தற்போது ஆசிரியர்கள் சிலரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கான பயிற்சிகளை வழங்க வேண்டியுள்ளது.

இந்த ஆண்டில் 12 ஆயிரம் அனுபவம் மிக்க சிரேஷ்ட ஆசிரியர்கள் ஓய்வுபெறவுள்ளனர். அவர்களின் இடத்துக்கு பொருத்தமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தை 100 கல்வி வலயங்களிலும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் இன்று (திங்கட்கிழமை) இடம்பெறவுள்ளது.

ஒரு சர்வதேச அமைப்பு, பொலிஸார், சுகாதார அமைச்சு, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், சிவில் பொலிஸார், போதைப்பொருள் விழிப்புணர்வு சபை உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் இணைத்து எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி சகல பாடசாலைகளிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். – என்றார்.

## பிரபல வர்த்தகரே சர்வசாதாரணமாகக் கொலை மக்களின் பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம்?

### எஸ்.எம்.மரிக்கார் எம்.பி. கேள்வி




பாதுகாப்பு அமைச்சு இம்முறை வரவு – செலவுத் திட்டத்திலும் மிக அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், பிரபல வர்த்தகர் கொழும்பு நகரில் அடித்து சர்வ சாதாரணமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் அப்படியானால், பொது மக்களின் நிலைமை என்னவென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் தாக்குதலுக்கு உள்ளாகி மரணமடைந்துள்ளார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதை நாங்கள் பார்த்தோம். அவரை பொரளை கனத்தை மயானத்திற்குள் கொண்டு சென்றுள்ளனர்.

அப்படியானால், இந்த நாட்டின் பாதுகாப்பு எங்கே என்று நாங்கள் கேட்கின்றோம். பாதுகாப்பு அமைச்சுக்கு இம்முறை வரவு – செலவுத் திட்டத்திலும் மிக அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கும் நிலையில், பிரபல வர்த்தகர் ஒருவர் வீதியில் தாக்கி இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அப்படியானால், சாதாரண மக்களின் தலைவிதி எப்படியானதாக இருக்கும். பாதுகாப்பு இல்லை என்றால், ஏன் அதிகளவு பணம் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சர் என்ன செய்து கொண்டிருக்கின்றார்?

மக்கள் வீட்டில் இருந்து வெளியில் வர முடியாது உள்ளே ஒளிந்திருக்க நேரிடும். பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகளவில் நிதி ஒதுக் கப்பட்டிருக்குமாயின் நாட்டின் வர்த்தகர்கள் மட்டுமல்லர் சாதாரண மக்களின் பாதுகாப்புக்கும் பாதுகாப்பு அமைச்சரே பொறுப்புக்கூற வேண்டும்.

வர்த்தகர்கள் அடித்து கொலை செய்யப்படுவார்கள் என்றால், அவர்களுக்கு வெளியில் வர முடியாத நிலைமை ஏற்படுமாயின், அவர்கள் எப்படி வர்த்தகத்தில் ஈடுபடுவார்கள்?

அப்போது வர்த்தகம் வீழ்ச்சியடையும். உண்மையில் இது நாட்டின் பொருளாதார நெருக்கடியின் ஒரு பக்கம். மக்களுக்கு வருமானம் இல்லை என்பதால், பல சிறிய ரவுடி குழுக்கள் உருவாகியுள்ளன.

கடன் வாங்கும் ஒருவருக்கு கடனை திரும்ப செலுத்த முடியாமல் போனால், மாற்று வழிகள் பற்றி சிந்திப்பார். இதுதான் எனக்கு புலப்படும் நிலைமை. பாதுகாப்பு அமைச்சரான நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் நாட்டின் பொருளாதாரத்தையும் மீட்காமல் இருக்கின்றார்.

பாதுகாப்பும் வழங்குவதில்லை. மக்களின் அடிப்படை உரிமைகளையும் உறுதிப்படுத்துவதில்லை. மனித உரிமைகளையும் உறுதிப்படுத்துவதில்லை. கருத்து சுதந்திரத்தையும் பாதுகாப்பதில்லை.

இந்த மனிதர் என்ன நாடகத்தை ஆடிக் கொண்டிருக்கின்றார். இதனால், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பை அவர் ஏற்கவேண்டும். பாதாள உலக குழுக்களின் செயற்பாடுகளால், மக்களின் உயிர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதனை விளையாட்டாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இதில் இருக்கும் ஆபத்தான நிலைமையைப் புரிந்துகொள்ளுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் எனவும் எஸ்.எம். மரிக்கார் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவை நோக்கி இலங்கை சாயவில்லை

## பிரதமர் தினேஷ் திட்டவட்ட செவ்வி



இலங்கை இந்தியாவை நோக்கி சாயவில்லை என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பெர்ஸ்ட்போஸ்டிற்கு வழங்கிய பேட்டியின் போது இலங்கை இந்தியாவை நோக்கி சாய்கின்றதா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த பேட்டியில் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

இலங்கை எப்போதும் தனது புவிசார் அரசியல் நிலைமையை ,இந்து சமுத்திரத்தில் அதன் அமைவிடத்தை பயன்படுத்த முயலும் பல்வேறு சக்திகள் தொடர்பில் நடுநிலை நிலைப்பாட்டை பின்பற்றியுள்ளது.

எங்கள் அயல்நாடான இந்தியாவை எங்கள் நெருங்கிய நண்பனாகக் கருதி நாங்கள் செயற்பட்டுவந்துள்ளோம், வரலாறு முழுவதும் எங்களுக்கு இந்திய மக்களுடன் கலாசார ரீதியில் நாங்கள் நெருக்கமான தொடர்பைப் பேணி வந்துள்ளோம்.

எனினும் நிலைமை எவ்வாறானதாக உருவாகினாலும் இலங்கை அனைத்து நாடுகளுடடனும் நட்புறவைப் பேணிவந்துள்ளது.

சர்வதேச அளவில் நாங்கள் அனைவருடனும் நட்புறவைப் பேணிவந்துள்ளோம்.

இந்தியா எப்போதும் இலங்கைக்கு உதவி வந்துள்ளது நாங்கள் தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியின் போது கூட உதவியுள்ளது.

உதாரணத்துக்கு நாங்கள் கடன்களை செலுத்தவேண்டிய நெருக்கடியிலிருந்து விடுபட முயலும்வேளையில் துயரமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்தியா இலங்கைக்கு உதவி வருகின்றது.

இலங்கையின் நெருங்கிய அயல் நாடு என்ற வகையில் தொடர்ச்சியாக இந்தியா கடனுதவிகளை வழங்கி வருகின்றது. இதனால் நாங்கள் நன்மை அடைந்துள்ளோம்.

நாங்கள் இந்தியன் ரயில்வேயுடன் ஒத்துழைப்பை அதிகரிக்க விரும்புகின்றோம். எங்களுக்கு இந்தியாவிடமிருந்து அதிக முதலீடுகள் தேவை இலங்கையுடன் இணைந்து செயற்பட விரும்புபவர்களுடன் கூட்டு முயற்சிகளில் ஈடுபட ஆர்வமாக உள்ளோம்.

இலங்கையும் இந்தியாவும் உலகின் பழைமையான ஜனநாயக நாடுகள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்த நாடுகளில் மக்கள் அரசாங்கங்களை தெரிவு செய்துள்ளனர் தோற்கடித்துள்ளனர்.ஆனால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்தும் நீடிக்கின்றன.

இலங்கையின் அரசமைப்பின் முன்னாள் அனைவரும் சமமானவர்கள் எவரும் எந்த மனித உரிமை மீறலிற்கு எதிராகவும் நீதிமன்றம் செல்ல முடியும்.

கடந்த சில மாதங்களாகக் காணப்பட்ட ஜனநாயக அமைதியின்மைக்கு பதிலளிப்பது தொடர்பில் தற்போது அதிக நம்பிக்கை காணப்படுகின்றது.

மக்கள் மத்தியில் நாங்கள் எங்கள் நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்தியுள்ளோம் – அவர்கள் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் – யாராகவிருந்தாலும் சரி அனைத்து மக்களும் பிரார்த்தனை செய்த சட்ட ஒழுங்கு நிலையை நாங்கள் மீண்டும் ஏற்படுத்தியுள்ளோம்.

அரசாங்கத்தின் மீது தற்போது அதிகளவு நம்பிக்கையுள்ளது, நாங்கள் தற்போது எதிர்க்கட்சிகள் மத்தியில் நாட்டின் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் குழுக்களுடன் இணைந்து செயற்படுகின்றோம்.

வடக்கு, கிழக்கு மக்களும் முஸ்லிம் மக்களும் சமீபகாலமாக முன்வைத்துள்ள சில பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைத்துள்ளோம்.

தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம்.

நாங்கள் எப்போதும் இலங்கையின் 2 ஆயிரத்து 500 வருட வரலாற்றைப் பேணி வந்துள்ளோம். கடந்த 500 வருடங்களில் நாங்கள் வந்து சென்றுள்ள மேற்குலக சக்திகளுடன் உறவுகளைப் பேணி வந்துள்ளோம்.

இந்தியாவைப் போல நாங்களும் அடுத்த வருடம் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ளோம்.

எங்களின்பலமாகக்காணப்பட்ட நடுநிலை, அனைத்து நாடுகளுடனுமான நட்புறவு போன்றவை தொடர்ந்தும் எங்களின் முன்னேற்றத்துக்கு உதவும் என நம்புகின்றோம்.

இது இந்தியாவை நோக்கி சாய்வது அல்ல அல்லது வேறு எந்த நாட்டை நோக்கியும் சாய்வதும்அல்ல, ஒவ்வொருநெருக்கடியின் போதும் இந்தியா எங்களின் நெருக்கமான அயல் நாடாகச் செயற்பட்டுள்ளது.

இருநாடுகளாலும் இராஜதந்திர வட்டாரங்களுக்கு அப்பாலும் கருத்துப்பரிமாற்றங்களில் ஈடுபட முடிகின்றது. இது எங்களுக்கு நம்பிக்கையை அளிக்கின்றது. – என்றார்.






## பிரபல கோடீஸ்வரர் வீட்டில் கொழும்பில் பாரிய திருட்டு!

கொழும்பு, பம்பலப்பிட்டி ஸ்கெல்டன் வீதியிலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டில் பாரிய திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இரகசியமாக வீட்டுக்கு நுழைந்தவர்கள், கைத்துப்பாக்கி, மூன்று கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பணம் மற்றும் தங்கம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர் என பம்பலப்பிட்டி பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி வீட்டில் இருந்து அரசாங்க அனுமதி பெற்ற கைத்துப்பாக்கி , 12 தோட்டாக்கள், ஒரு கோடியே ஒரு லட்சம் ரூபா பணம், 6 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் மற்றும் ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகள் என்பன திருடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பம்பலப்பிட்டிபொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனவரி முதல் பலகட்ட பேச்சுக்கள் அர்ப்பணிப்புடன் அரசு ஈடுபடுகின்றது!

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்றி உறுதி

இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு தொடர்பாக அடுத்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் பலகட்டப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தயாராகியுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பேச்சு விடயத்தில் அர்ப்பணிப்புடனேயே செயற்பட்டு வருகின்றது என்று தெரிவித்த அவர், அனைத்து இனக்குழுமங்களின் அரசியல் தரப்புக்களிலும் 'பிச்சைக்காரன் புண்போன்று' இந்த விடயம் நீடிக்க வேண்டும் எனக் கருதும் வன்போக்கு நிலைப்பாடுகளை உடையவர்கள் உள்ளார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

சர்வகட்சி மாநாட்டின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனங்களுக்கிடையிலான தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் நீண்டகாலமான கரிசனை கொண்டவராக இருக்கின்றார்.

இந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கம் அவருக்கு பல தசாப்தங்களாகவே இருந்து வருகின்றது.

இவ்வாறான நிலையில், தற்போது சர்வகட்சிகளின் பங்கேற்புடன், பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பேச்சுகளை எதிர்மறையாகப் பார்ப்பவர்களும் உள்ளார்கள்.

குறிப்பாக, ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தேடுவதற்காக முன்னெடுக்கப்படுவதாகவும் கூறுகின்றார்கள். சர்வதேச நாயணநிதியத்தின் உதவிகளைப்பெற்றுக் கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் செயற்படாகவும் பிரசாரம் செய்யப்படுகின்றது.



உண்மையிலேயே சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களுக்கும் இனப்பிரச்சினை உள்ளிட்ட இதர பிரச்சினைகள் தொடர்பான பேச்சுக்களுக்கும் எவ்விதமான தொடர்புகளும் இல்லை.

நாணயநிதியத்துடனான பேச்சுக்கள் தொடர்பாக பிரத்தியேகமான சந்திப்புக்களும் பேச்சுக்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்தப் பேச்சுகளுக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான பேச்சுக்களுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. தமிழ், முஸ்லிம், சிங்கள, மலையக தரப்புக்களில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விடாது 'பிரச்சைக்காரன் புண்' போல நீண்டுகொண்டிருக்க வேண்டும் என்று கருதுகின்ற தரப்பினர் இருக்கின்றார்கள்.

இது துரதிஷ்டவசமானது. அத்துடன், அவர்களை வெற்றிகொள்வதும் சவால்கள் நிறைந்தது. ஆனால், அவ்விதமான விடயங்களை எல்லாம் கடந்து தான் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அதற்குத் தயாராகவே உள்ளது.

குறிப்பாக, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பல்வேறு கட்டப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதில் எவ்விதமான தயக்கத்தையும் அரசாங்கத்தரப்பு காண்பிக்கப் போவதில்லை.

மேலும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபித்தல், கைதிகளின் விடுதலை உள்ளிட்டவற்றுக்கான அடிப்படைச் செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு விட்டன. காணாமாலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பற்றியும் கவனத்தில் கொண்டு இழப்பீடு உள்ளிட்ட நடவடிக்கைகளை வழங்குவதற்கு தயாராகவே உள்ளோம். – என்றார்.

# மக்கள் போராட்ட ஒத்துழைப்பு இயக்க ஏற்பாட்டில் திருமலையில் போராட்டம்!

திருகோணமலை கடற்கரைக்கு முன்பாக அமைந்துள்ள காந்தி சுற்றுவட்டத்துக்கு முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வடக்குக் கிழக்கு மக்கள் போராட்டத்துக்கான ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் அரசியல் கைதிகளின் உடனடி விடுதலை, பயங்கரவாதச் தடைச் சட்டதை நீக்கு, இராணுவ மயமாக்கலை நிறுத்து, திட்டமிட்ட காணி அபகரிப்புக்களை நிறுத்து போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை நாடளாவிய ரீதியில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இந்தப் போராட்டம் நேற்று திருகோணமலையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# எல்லையில் ஊடுருவிய சீன இராணுவத்தினரை விரட்டியடித்த இந்தியப் படையினரின் வீரதீரம்!

## மெச்சுகின்றார் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்





புதுடில்லி,டிச.19

“எல்லை பகுதிக்குள் ஊடுருவிய சீன ராணுவத்தினரை விரட்டி அடித்த நம் வீரர்களின் தைரியத்தையும், வீரத்தையும் எவ்வளவு பாராட்டினாலும் போதாது” என இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறினார்.

இந்திய வர்த்தக மற்றும் தொழில் கூட்டமைப்பின் ஆண்டு கூட்டம், புதுடில்லியில் நேற்று முன்தினம் நடந்தது. அதில், கலந்து கொண்டு பாதுகாப்பு அமைச்சரும், பா.ஜ.கவின் மூத்த தலைவருமான ராஜ்நாத் சிங் பேசியதாவது:-

### வல்லரசாக விரும்பும் இந்திய தேசம்

இந்தியா வல்லரசு நாடாக விரும்புகிறது. அதற்காக மற்ற நாடுகளை அடக்கி ஆள வேண்டும் என ஒருபோதும் நினைத்தது இல்லை. மற்ற நாடுகளின் ஓர் அங்குல நிலத்தைக் கூட ஆக்கிரமிக்க வேண்டும் என நினைத்தது இல்லை. உலக நாடுகளின் வளர்ச்சிக்காகவே இந்தியா வல்லரசாக விரும்புகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் கல்வான் பகுதியிலும், சமீபத்தில் அருணாச்சல பிரதேசத்தின் தவாங் பகுதியிலும் சீன இராணுவத்தினர் ஊடுருவ முயற்சித்தனர். அவர்களை நம் வீரர்கள், தீரத்துடன் போராடி விரட்டியடித்தனர். இந்திய வீரர்களின் இந்த துணிச்சலையும், தைரி யத்தையும் எவ்வளவு பாராட்டினாலும் போதாது. ஆனால், இதை சில எதிர்க்கட்சித் தலைவர்கள் விமர்சிக்கின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர்களின் நோக்கத்தை நாங்கள் ஒருபோதும் கேள்வி கேட்டது இல்லை. கொள்கை ரீதியாக அவர்களுடன் விவாதம் நடத்தவே விரும்புகிறோம். அரசியல் என்பது உண்மையை அடிப்படையாக கொண்டதாக இருக்க வேண்டும்.

விவசாயத் துறையில் சீர்திருத்தம், ஜி.எஸ்.டி., அமல் போன்ற திட்டங்களை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்க்கின்றன. நாட்டின் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களை எதிர்ப்பது ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு எதிரானது.

நாடு சுதந்திரம் அடைந்தபோது உலகின் முன்னணி பொருளாதார நாடுகளில் ஒன்றாக நாம் இருந்தோம். அப்போது சீனாவின் பொருளாதார வளர்ச்சி, நம்மை விட குறைவாகவே இருந்தது. அதற்கு பின், பொருளாதாரத்தில் சீனா அதிக வளர்ச்சி அடைந்தது.

ஆனால், 2014 இல் பிரதமர் மோடி தலைமையிலான அரசு பதவியேற்ற பின், நம் நாடு பொருளாதாரத்தில் அதிவேக வளர்ச்சி அடைந்து வருகிறது.

உலகின் சக்திவாய்ந்த 10 நாடுகளின் பட்டியலில் நாமும் இடம் பெற்றுள்ளோம். தற்போது உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக நாம் உள்ளோம். – இவ்வாறு அவர் பேசினார்

# சர்வதேச ரீதியிலான சவால்களை எதிர்கொள்ள இந்தியா தயாராம்!








சர்வதேச அளவிலான சவால்களை எதிர்கொள்ள இந்தியா தயார் எனப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்றுத் தெரிவித்தார்.

ஐ.என்.எஸ். மொர்முகோவ் போர்க்கப்பலை கடற்படையில் முறையாக இணைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

மும்பைக் கடற்படைத் தளத்தில் நேற்று மத்திய பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத்சிங் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஐ.என்.எஸ். மொர்முகோவ் என்ற போர்க் கப்பல், இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது.

இதன் மூலம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ள 2ஆவது போர் கப்பல் என்ற பெருமையை அது பெற்றது. விழாவில் பேசிய மத்திய மந்திரி ராஜ்நாத்சிங் கூறியுள்ளதாவது:-

இந்தக் கப்பல் இந்தியக் கடற்படையின் திறன்களை மேம்படுத்துவதுடன், கடல் பாதுகாப்பை உறுதி செய்யும். தொழில்நுட்ப ரீதியிலான அதிநவீன ஏவுகணைகளைத் தாங்கிச் செல்லும் வல்லமை கொண்டது. இதில் இடம்பெற்றுள்ள 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட உபகரணங்கள் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டவை. இந்திய இராணுவம் தற்சார்பு நிலையை அடைவதற்கு இது உதாரணம். இந்தியக் கடற்படை, கடல்சார் பாதுகாப்பைக் கண்காணிப்பது மட்டுமல்லாமல், சமூக, பொருளாதார வளர்ச்சியிலும் பங்காற்றுகிறது. இந்திய கடல் பிராந்தியத்தைப் பாதுகாப்பதே, இந்தியக் கடற்படையின் முக்கிய இலக்கு. இந்திய பொருளாதார வளர்ச்சி கடல் மார்க்கமாக அதிகரிக்கும் வர்த்தகத்தைச் சார்ந்தே இருக்கிறது. எல்லைப்பகுதிகளையும், கடலோரப் பகுதிகளையும் பாதுகாக்கும் ஆயுதப்படையினர், தங்களுடைய அர்ப்பணிப்புடன் கூடியப் பங்களிப்பின் மூலம், இந்தியாவின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழ்கின்றனர். சர்வதேச அளவிலான சவால்களை எதிர்கொள்ள நாடு தயாராக இருக்கிறது.இராணுவத்தில் பெரும்பாலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களைக் கொண்ட உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த மத்திய அரசு முன்னுரிமை அளிக்கிறது. – இவ்வாறு அவர் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## துன்பம் நேர்கையில்...



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 216**

இளையதலை, முறைஆஸ்திரேலியா தமிழ் பகுதிகளின் பிரச்சாரங்களை முன்னெடுத்து, அதற்கு ஊது குழலாக, அவர்களது பாராட்டுக்கும் திருப்திக்கும் இதனை நெறிப்படுத்தாமல், ஆஸ்திரேலியத் தமிழர் அல்லாதவர்களுக்கு – பொதுவெளியில் அவர்கள் அறிந்து கொண்ட, புரிந்து கொண்ட அரசியல் நிலைப்பாட்டோடு, நடந்த சம்பவங்கள், மக்களின் இன்னல்கள் ஊடாக தெளிவையும் பச்சாதாபத்தையும் ஏற்படுத்தும் நோக்கைக் கொண்டிருந்ததாக நினைத்தேன்.

விடுதலைப் புலிகள் அங்கத்தினர்களை சேர்த்த முறைகள், பணம் பெற்றவை, இளம் வயதினரை போரில் ஈடுபடுத்தியமை, முள்ளிவாய்க்கால் நாக்களில் தப்பிச் செல்ல முயன்றோரைச் சுட்டுச் சாகடித்தமை போன்ற காட்சிகளைக் கண்ட ஆஸ்திரேலிய இனத்தவர்கள், தாங்கள் புலிகளை விடுதலை வீரர்களாக – விடுதலைக்காகப் போராடியவர்கள் என – தங்கள் மனதில் நினைத்தோம் என்றார்கள்.

அவர்கள் அந்த நோக்கங்களுக்காகத் தங்களை அர்ப்பணித்தவர்கள், ஆனால் இவை கடைசி நாள்களின் சீரழிவுகள், எதற்கும் துணிந்ததான கடைசி நேர லட்சிய அலட்சியம் எனப் பதில் தந்து, அதனை இராணுவத்தின் இழி செயல்களிலும் அட்டூழியங்களுடனும் இணைத்து, அவர்களின் எதிர் செய்கைகளையும் பார்க்க வேண்டும் என்றேன். தப்ப முயன்றவர்களை சுட்டு சாகடித்தமை என்ற மனத்தாக்கத்தை அழிப்பது என்பது சிரமமாக இருந்தது.

தமிழ் மக்கள் தங்களது விடிவுக்காக அடுத்த தலைமுறைகளை ஈடுபடுத்தும் போது, அவர்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு என்ன பதில் வைத்திருக்கிறார்கள்? உண்மைகளை, உண்மையில் நடந்தவற்றை, முன்வைக்க வேண்டுமா, அவற்றை எங்கே, எப்படி முன் வைக்க வேண்டும், இன்னும் முலாம் பூசிக் கொண்டே நகர வேண்டுமா என்பவை முக்கியம். சர்வதேசப் பார்வையாளர்களை எப்படியாக உள்வாங்குவது என்பவற்றின் சுய விமர்சனத்திற்கானன முக்கியமான திறவுகோலாக இந்த நாடகம் அமைகிறது. தமிழ் சிங்கள மக்கள் யாபேரும் தங்களின் நல்லிணக்கங்களை மனதில் கொண்டாலென்ன, விட்டாலென்ன, மனித அவலங்கள், அவர்களின் ஆசைகள், நிராசைகள், அதிகாரங்களின் சீரழிவு என்பதை உணர நிச்சயம் இதனைப் பார்க்க வேண்டும். இந்த நாடகத்தை எழுதும் யாவு எப்படி வந்தது என சக்தியிடம் வினவியோபோது, தான் இளைஞனாக சிட்னியில் வாழ்ந்த காலங்களில், ஊடகங்கள், தன் நண்பர்களோடு அளவளாவியதில் பெற்றுக் கொண்டவைகள்தான். சோமாலியா, சூடான், ஈரான், ஈராக், பாலஸ்தீனிய நாடுகளில் நடப்பவை எப்படி தனக்கு அந்நியமானவையாக தோன்றினவோ, அதேபோல் இந்த இனப் பிரச்சினையும் போராட்டமும் கூட ஏதோ ஒரு தூர தேசத்தில் நடந்து கொண்டிருப்பதாகவும் அதன் முடிவுகள் தன்னை பாதிக்கப் போவதில்லை என்ற உணர்வில் இருந்ததாகவும் கூறினார்.

ஆனால் லண்டனுக்குச் சென்று தனது சித்தி மணியுடன் (சுந்தரலிங்கத்தின் இன்னுமொரு மகளும், தந்தையினது அரசியலில் ஈடுபாடு காட்டியவரும்) சிறிது நாள்கள் தங்கிய போது அவர்கள் தாங்கள் யாபேரும் அங்கிருந்த வாழ்க்கைகளை விட்டு ஏன் புலம்பெயர்ந்தோம் என விவரித்து, பேரனாரது நூல்கள் சிலவற்றையும் தந்து, அவற்றை தனது நாடக ஆர்வத்திற்கு பாவிக்கலாம் என கூறினாராம்.

அந்த மனச்சுமைகளுடன் திரும்பிய



போது சிட்னியில் ஆஸ்திரேலியா பூர்வ குடிகளின் கலைஞர் ஒருவரை சந்தித்தபோது, அவர் தனது ஆக்கங்களில் தனது முன்னோரின், தனது தேசத்தின் இடங்களையும் வெள்ளையரின் வருகைக்குப் பின் அவர்கள் சந்தித்த இழப்புக்களையும், முக்கியமாக வெள்ளையின ஆஸ்திரேலியர்களுக்காக, பார்வைக்காகச் செய்தவற்றையும் விவரிக்க, அந்த உந்துதலில் பிறந்ததுதான் "Counting and Cracking'. பின் அதில் இணைந்திருந்த அர்ஜூனன், சக நடிகர்கள், பார்வையாளர்களின் உந்துதல்களில், முள்ளிவாய்க்கால் அதன்பின் நடக்கும் சம்பவங்கள் என 'காடும் கடலும்' உருவாகியது என்றார்.

### நாடகக் கதையின் உரு

நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்தின் மீது சந்திரிகா ஆட்சியில் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட குண்டு வீச்சின் பின்னர் அந்த ஆலயத்தை பராமரித்த குடும்பம், தாங்கள் அடைக்கலம் தந்த குடும்பங்களின் சாவுக்கு தாங்களே காரணம் என்ற குற்ற உணர்வில் சிதைவடைகிறது. இராணுவம் வானில் இருந்து வீசி எறிந்த துண்டுப் பிரசுரங்களில் மத வழிபாட்டுத் தலங்களில் அவர்கள் பாதுகாப்பாக இருக்கலாம் என்று நம்ப வைத்ததற்கு தாங்கள் காரணமாகி விட்டோம் என குடும்பத்தவர்கள் ஏங்க, பாதிக்கப்பட்டவர்களோ குடும்பத்தின் தலைவர் அரசாங்கத் தொடர்பில் அறிந்து கொண்டே தங்களை அடைக்கலங்களுக்கு அங்கு அழைத்தார் எனக் குற்றம் சுமத்தினார்கள். இவற்றால் குடும்பம் ஆஸ்திரேலியாவுக்கு குடிபெயர ஏற்பாடுகள் செய்ய, இடிபாடுகளில் இருந்து குழந்தைகளின் சடலங்களை எடுத்த வேதனையில் ஆட்பட்ட மூத்த மகனை, விடுதலைப் புலிகள்



போதனைகள் தந்து, சிங்கள ஆக்கிரமிப்புகாரருக்கு எதிராகத் தங்களோடு இணைத்துக் கொள்கிறார்கள். இதில் துக்கம் கொண்ட தாயார் (ஆனந்தவல்லி) கொடுமைகள் நீங்கி, தனது மகனைத் தான் திரும்பத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும் வரை உலகைப் பார்ப்பதில்லை என திருஷ்டாத்திரனது மனைவி போல கண்களைக் கட்டிக் கொள்கிறார். ஆஸ்திரேலியா போக மறுக்கிறார். அதனால் தகப்பனும் ஒரு மகளும் வெளியேற தாயும் அடுத்த இரண்டு மகள்களும் தாயுடன் தமையன் வரும் வரை தங்குவதற்கு தீர்மானிக்கிறார்கள். மூத்த மகள் அந்தப் பகுதியில் வாழ்ந்த குடும்பத்தினரோடு நட்பில் இருந்த சிங்கள அரசு அதிகாரியின் மகனை காதலிக்கிறாள். இளையவள் விலங்கு மருத்துவம் படிக்க வேண்டும் என்று ஆசையில் மிருகங்கள், பறவைகளோடு அன்பில் திளைத்து, அதில் மகிழ்வு காண்கிறாள். இடம் பெயர்ந்து போகும் இடமெல்லாம் கோழிக்குஞ்சு ஒன்றை சிறிய கூட்டில் மறக்காமல் தனது பொக்கிமாகக் கொண்டு செல்கிறாள். சாப்பிட ஒன்றும் இல்லாத வேளைகளில் அதை பெரியவள் சாகடிக்கப் பார்க்க, நடக்கும் உணர்வுகளின் போட்டிகள் திறமையாக வெளிப்படுகின்றன. நடிகர்கள் யாவரும் தமிழர்கள் அல்லர். ஈழத்தைச் சேர்ந்தவர்களும் அல்லர். தமிழ்நாடு, ஆந்திரா, ஆஸ்திரேலியா, சிங்களவர் என சர்வதேச குடும்பம். தாங்கள் அறிந்து கொண்ட புரிதலோடு பாத்திரங்களுக்கு உயிர் கொடுத்தார்கள். அர்ஜுனனின் அர்ப்பணிப்பில் நேர்த்தியான ஒலியமைப்பும், தேஷ், சாருகேஸி ராகங்களில் சம்பவங்களுக்கான பின்னணி, மிருதங்கம், ட்ரம்ஸ் எனப் பல வகைக் கருவிகளில் துப்பாக்கிச் சூடுகள், குண்டு வீச்சுகளுக்கு தரும் இசை ,அத்தோடு இணைந்து வீணையில் மெருகூட்டிய இந்தியக் கலைஞர்கள் யாவருமே மிகத் திறமையாக தங்கள் பங்குகளை செய்தார்கள். அவர்கள் எல்லோருமே நாடகத்தின் ஆன்மா இழந்து விடாமல் அதன் கதை பார்வையாளர்களைச் சென்றடைவதில் வெற்றியீட்டியுள்ளார்கள். இது நாடகத்தின் விமர்சனம் இல்லாதமையால், பல அம்சங்களை பற்றித் தொடவில்லை. சிறிதளவில், போரின் அவலங்களால் தாயும் இரண்டு மகள்களும் முள்ளிவாய்க்காலை நோக்கியே நகர்கிறார்கள். இடையில் இளைய மகள் மரணிக்க, மூத்தவள் மட்டும் எஞ்சுகிறாள்.

முள்ளிவாய்க்கால் அலங்களில் மகனும் மரணிக்கிறான். அவலங்களை அறிந்து ஆஸ்திரேலியாவில் இருந்து தகப்பனும், சட்டத்துறைப் பட்டம் பெற்ற மகளும் ஸ்ரீலங்கா பயணிக்கின்றனர். ஆயினும் மூத்த மகள், இறந்து விட்ட தனது தமையனுக்கு கிரியைகள் செய்யாது வெளியேற மாட்டேன் என அடம் பிடித்துத் தனது காதலனின் தகப்பனான அரசு அதிகாரியுடனும் இராணுவத்தினுடனும் சர்ச்சைகளை ஏற்படுத்தி, தன்னுயிருக்கே ஆபத்து வைத்துப் போராடும் போது வெளிவரும் உரையாடல்கள் நாடகத்துக்கு ஜீவனாகின்றன. கடைசியில் அதிகாரி யதார்த்தங்களை ஏற்று, ஈமக் கிரியைகள் செய்ய இடம் கொடுப்பதற்கு, முள்ளிவாய்க்கால் கோவிலை அடித்து வசித்த குடுகுடுப்பை சாத்திரம் சொல்லுபவள் இவற்றை நடத்தியவற்றுக்காக, சட்டமும் ஒழுங்கும் என்று சொல்லி அறத்தையே தூக்கி எறிந்தவர்கள், கணக்கு கொடுக்கும் வரை அழிந்தே போவீர்கள், உங்களது மனச்சாட்சிகள் குத்திக் கொண்டே இருக்கும், தர்ம தேவதை விட மாட்டாள் என்று அடித்துச் சொன்னதின் தாக்கமும் இருந்தது. இறந்து போனவர் இருவர், மற்ற மகள்கள், கணவன் என்று அதர்மத்தின் முடிவில் அவர்களின் நிலையை அறிந்து, நீதியான காலம் உருவாகும் என்று தாயார் கண்ணின் கட்டுக்களை அவிழ்த்து 'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து இன்பம் கேட்க மாட்டாயோ' என்ற பாடலுக்கு ஆனந்தவல்லியின் அபிநயத்துடன் நாடகம் முடிவு வருகிறது. கனத்த மனதுடனும், அவர்களுடனும் சம்பாசித்து, இளைய தலைமுறை அர்ஜூனனுடன் அவர்கள் மெருகேற்றியிருக்கக் கூடியவை பற்றி நள்ளிரவு வரை சம்பாசித்துக் கொண்டிருந்த வேளைகளில் உள்ளுணர்வு ஒன்றை உணர்த்தியது.

'சூதும் வாதும் வேதனையைத் தரும்', 'வினை செய்தவன் வினை அறுப்பான்', 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பவை. நாடகத்தின் பிற்பகுதி உரையாடல்களை சக்தி எழுதும்போது கோட்டாபய ஜனாதிபதிப் பதவியைத் துறந்து ஓடுவார், மஹிந்தா மக்களிடமிருந்து தப்ப திருகோணமலையில் பதுங்குவார், நாடே பஞ்சத்தில் மூழ்கும், ரணில் ஜனாதிபதியாக வந்து, இறந்தவர்களின் நினைவு கூர்தலை அனுமதித்து உத்தரவு தருவார் என்று எண்ணியிருக்க முடியாது என்பவை சிந்தனையில் சுழன்றன.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

## தற்போதைய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் இவர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தவிர மேலும் 6000 கல்வி பீடத்தில் பட்டதாரிகள் நியமிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

## பல்கலை அனுமதி; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவுசெய்யலாமென ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தகுதி பெறும் மாணவர்களுக்குஇன்று குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் அரசு பவள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புரையாற்றிய இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கட்சியின் பொதுச்செயலாளர், நிர்வாகச் செயலாளர், பொருளாளர், வடக்கு மாகாண அவைத்தலைவர் மற்றும் நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர்கள், வடக்குமாகாண சபையின் மேனாள் உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உபதவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள்,அபிமானிகள் என பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தமிழரசு கட்சியின் 75ஆவது ஆண்டு ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் -

இலங்கைக்கு 1948ஆம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரம் வழங்கப்பட்டு இருக்கின்ற போதும் தமிழர்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது இலங்கையில் தமிழர்கள் ஆட்சி செய்த நிலங்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை. அது சிங்களவர்களுக்கு கிடைத்துள்ளது.

தமிழ் மக்கள் சுதந்திர தமிழர்களாக இருக்கவேண்டும்என்றும், அதற்காகவே அன்று 1948ஆம் ஆண்டிலேயே தந்தை செல்வா தனது அஹிம்சை வழியிலான போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். அதன் 75 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

இலங்கையில் தற்போதைய ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி சிதைந்து, அவர் தேசிய பட்டியலில் நாடாளுமன்றத்துக்குச் சென்று, பிரதமராகி, ஜனாதிபதியாகி இருக்கின்றார். இந்த நிலையில், பேச்சு வார்த்தை மூலம் தமிழர்களின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அழைத்திருக்கின்றார்.

தமிழ் மக்களுடைய விடுதலையை நேசிக்கின்ற ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வதேச நாடுகளின் குறிப்பாக இந்தியாவின் அனுசரணையுடன் பேச வேண்டும்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சமஷ்டி தேடிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:-

தமிழர்களது சுதந்திரத்தைப் பறித்து, அவர்களின் இறைமையை பறித்து, இலங்கையில் தமிழர்களது உரிமைகளையும் சேர்த்து பிரித்தானிய அரசால் இலங்கைக்கான சுதந்திரமாக 1948ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

அதற்கு எதிராக - அந்த அநியாயங்களுக்கு எதிராக - ஒரு விடுதலைப் பயணத்தை ஆரம்பித்தவர் தந்தை செல்வா. 1948இல் முதலாவது களம் அமைக்கப்பட்டு தமிழர்களுக்கான ஒரு அரசு வேண்டும், அந்த அரசு எவ்வாறு அமைய வேண்டும் என்ற ஒரு தீர்க்கதரிசன சிந்தனையோடு தனது பயணத்தை ஆரம்பித்தார்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 75 ஆண்டுகள் என்றால் எங்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைகின்றன. எனவேதான் இரண்டும் சமதராசில் வைத்து பார்க்கப்பட வேண்டிய விடயங்களாக நோக்கப்படுகின்றன.

மிக முக்கியமாக தந்தை செல்வாவின் தீர்க்கதரிசன வார்த்தைகள் 1949ஆம் ஆண்டிலேயே தமிழரசு கட்சியின் பதிவுகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வில் அவர் ஆற்றிய உரை இலங்கையில் ஒரு சமஷ்டி முறையிலான ஆட்சி முறை உருவாக்கப்பட வேண்டும். அது இலங்கையில் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் பாதிக்காது.

இந்த சமஷ்டி தீர்வானது சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் காப்பாற்றிக் கொள்ளும் ஒரு தீர்வாக அமையும் என்றவார்த்தைகளை குறிப்பிட்டிருந்தார்.

அவர் இனம் பற்றிச் சிந்தித்து, இனம் பற்றிய கொள்கைகளில் வழி நடந்தமசியால்தான் இன்றும் அவர் எங்கள் மனங்களிலே நிறைந்தவராக இருக்கின்றார். எங்களுடைய இலக்கு நோக்கிய பயணம் சவால் நிறைந்ததாக அமைந்துள்ளது.

நாங்கள் எந்த மண்ணில் இருந்து எங்களுடைய உரிமைகளுக்காக பேசினோமா, செய்திகளை சொன்னமோ, அதை அந்த இடத்தில் இருந்து, இந்த வீர மண்ணிலே இருந்து, நாங்கள் இந்த பவள விழாவுக்கான தொடக்கத்தை ஆரம்பித்திருக்கின்றோம் அதுதான் அதற்கான அடிப்படை காரணம்.- என்றும் அவர் குறிப்பிட்டார்.









காலைக்கதிர் Kalaikkathir

# உலக வல்லரசுகளின் போராட்டங்களில் இலங்கை பக்கச்சார்பின்றி நட்புறவுடன் செயற்படல் வேண்டும்!






## ஜனாதிபதி கோரிக்கை

உலக வல்லரசுகளுடன் நாம் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. ஏனென்றால் நாம் ஒரு தீவு அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்பட வேண்டும். என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தியத்தலாவ இராணுவ கல்வியியற் கல்லூரியின் 97 ஆவது பயிற்சியை முடித்து வெளியேறும் கெடட் உத்தியோகத்தர்களின் பிரியாவிடை மரியாதை அணிவகுப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் அங்கு தெரிவிக்கையில் –

உலக வல்லரசுகளின் போராட்டங்களில் இலங்கை பக்கச்சார்பின்றி அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்படுவதன் மூலம் சர்வதேச உலகில் இலங்கையை நல்ல நிலைக்கு உயர்த்த முடியும்.

நாடு என்ற அடிப்படையில் நாம் உலக வல்லரசுகளிடமிருந்து ஒரு தரப்பாகப் பிரிந்து நிற்கவில்லை. உலக வல்லரசுகளுடன் நாம் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. ஏனென்றால் நாம் ஒரு தீவு நாடு. அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்பட வேண்டும்.

இந்த நாட்டைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. உள்ளக மற்றும் வெளிப்புற தாக்கங்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் திறன் உங்களிடம் உள்ளது. உங்களை உள்ளடக்கிய எங்கள் இராணுவத்துக்கு இராணுவ அனுபவம் உள்ளது. மேலும் அவர்களுக்கு சர்வதேச போர் அனுபவம் உள்ளது. ஐ.நா. படைகளுடன் இணைந்து மாலி அரசின் நடவடிக்கைகளில் நமது பாதுகாப்புப் படைகளும் பங்கு கொள்கின்றன.

அதனால் எதிர்காலத்தில் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ளும் திறன் உங்களுக்கு உள்ளது. எனவே, அந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்து, நீங்கள் அனைவரும் வலுவாக முன்னேறுமாறு கேட்டுக்கொள்கிறேன். – எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சிரேஷ்ட பல்கலை மாணவர் தாக்கியதில் கனிஷ்ட மாணவர் வைத்தியசாலையில்!

## பேராதனைப் பல்கலையில் சம்பவம்

பேராதனை பல்கலைக்கழக கலைப்பீட சிரேஷ்ட மாணவர் ஒருவர் குடிபோதையில் வந்து அதே பீடத்தின் முதலாம் வருட மாணவன் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதில் காயமடைந்த முதலாம் வருட மாணவன் மருத்துவ சிகிச்சைக்காக பேராதனை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பல்கலைக்கழகத்தின் ஐவர் லேனிங்ஸ் விடுதியில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான மாணவன் கலைப்பீட முதலாம் வருட மாணவன் எனவும், அவர் நோர்டன் பிரிட்ஜ் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதியில் தங்கியிருந்த போது நான்கு மாணவர்கள் வந்தனர் எனவும் அவர்களில் ஒருவர் தன்னை தாக்கினார் எனவும் மாணவர் தெரிவித்துள்ளார்.

# கொட்டகலை சீ.எல்.எவ். வளாகத்தில் ஐயப்ப சுவாமியின் ஜோதி பூஜை நிகழ்வு

ஐயப்ப சுவாமியின் ஜோதி பூஜை நிகழ்வு சனிக்கிழமை கொட்டகலை சீ.எல்.எவ். வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

மார்கழி மாதம் 02 ஆம் நாளை முன்னிட்டு இந்த பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றதோடு படிப்பூஜையும் இடம் பெற்றது.

இந்த பூஜை வழிபாட்டுக்கு இலங்கையில் பல பாகங்களிலும் உள்ள ஐயப்ப சுவாமிக்கு மாலை அணிந்த அனைத்து குரு சுவாமிகள் உட்பட சுவாமிமார்களும் கலந்து கொண்டனர்.

மேலும் நிகழ்வை சிறப்பிக்க தென்னிந்தியாவின் பிரபல பக்தி பாடகர் அபிஷேக் வீரமணி ராஜ்வின் இசைக் கச்சேரியும் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இராணுவம் கைது செய்த மகனை தேடிப் போராடிய தாய் உயிரிழப்பு!

1996ஆம் ஆண்டு புத்தூர் கிழக்கு, ஊரணி பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மகனைத்தேடி போராட்டம் செய்த தாயார் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

புத்தூர் கிழக்கு, ஊரணி பகுதியைச் சேர்ந்த செல்வன் சோதி என்ற தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அன்னார் தனது மகன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னர், தனது மகனை மீண்டும் தன்னிடம் மீட்டுத் தருமாறு கோரி பல போராட்டங்களில் ஈடுபட்டு வந்துள்ளார்.



# சர்வகட்சிகளின் மாநாட்டின் ஊடாக 13 இற்கு அப்பால் செல்வது சவால்!

## பாக்கியசோதி சரவணமுத்து கருத்து



தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் உட்பட இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக தீர்மானங்களை முன்னெடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வகட்சிகளின் மாநாட்டின் ஊடாக 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் செல்வது சவாலான விடயமாகும் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வகட்சிகளின் மாநாட்டில் தமிழ்க் கட்சிகளின் பங்கேற்பு தொடர்பில் இருவேறு பிரதிபலிப்புக்கள் வெளிவந்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நோக்கத்தையும் உள்ளடக்கி சர்வகட்சிகளின் மாநாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் வெளிப்படுத்துவதற்கு கிடைக்கின்ற அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்த வேண்டும்.

அந்தவகையில், இந்த மாநாட்டில் பங்கேற்பதைத் தவறாகக் கொள்ள முடியாது. ஆனால், இந்த மாநாட்டில் பங்கேற்பதன் ஊடாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல், அதன் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவித்தல் காணமாலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட விடயங்களுக்கான தீர்வை முழுமையாகப் பெற்றுக்கொடுப்பதற்கு அதியுச்சமாக முனைய வேண்டும்.

இதனைவிடவும் தொடர்ந்து மாநாட்டில் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக கரிசனை கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அது 13ஆவது திருத்தச்சட்டத்தை மையப்படுத்தியதாகவே இருக்கும்.

அதாவது, அரசமைப்பில் உள்ளவாறு 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறே கோரமுடியும்.

அதற்கு, அப்பால் சென்று அதிகாரப்பகிர்வுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படுமாக இருந்தால் அவை நடைமுறையில் சாத்தியமாகுமா என்ற சந்தேகம் எனக்குள்ளது. ஏனென்றால், தற்போதைய அரசாங்கம் மக்கள் ஆணையை முழுமையாகப் பெறாதவொன்றாகும். அத்துடன், ஸ்திரமான நிலைமையிலும் அது இல்லை.

ஆகவே, அவ்விதமான அரசாங்கமொன்றால் அரசமைப்பை மாற்றியமைக்க வல்ல தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்துவது என்பது மிகக் கடினமானவிடயமாகும். அந்த அடிப்படையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தச் செய்வதே உசிதமானதாக இருக்கும். – என்றார்.

# அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்பு, டிசெ. 19

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் (புதன்கிழமை) மாலை 5.30 மணிக்கு அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் 'இலங்கையின் மனித உரிமை மீறல்கள்' என்னும் தலைப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி மரியதாஸ் யூட் தினேஸ் உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.இரட்ணவேல் தலைமை தாங்கவுள்ளார்.

# அரிசி இறக்குமதி தடையால் நெருக்கடியில் விவசாயிகள்!

புதிய உணவுப் பாதுகாப்புச் சட்டங்களைக் கொண்டு வருவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மத்தியில், சர்வதேச ஆதரவுடன் கைதிகளுக்கு நவீன விவசாய முறை தொடர்பாகப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் ஆகியவற்றின் உதவியுடன் சிறைச்சாலைகள் திணைக்களம் இதனை முன்னெடுத்துள்ளது.

உணவுப்பாதுகாப்பை உறுதி செய்வதற்கு எதிர்காலத்தில் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வாரம் தெரிவித்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் அதிகப்படியான அரிசி கையிருப்பு, அரிசியின் விலை வீழ்ச்சி மற்றும் விவசாயிகளின் வருமானம் பாதுகாக்கப்பட வேண்டும் என கூறி அரிசி இறக்குமதிக்கு இலங்கை தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.12.2022இல் வெளியிடப்பெற்றது.